# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 09.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- புதுப்பிக்க இயலா ஆற்றல் மூலங்களைப் பயன்படுத்தி மின்கலன்கள்(பேட்டரி) தயாரிப்பதற்கு பதிலாக புதுப்பிக்கத்தக்க வளங்களைப் பயன்படுத்தி ஆற்றலை சேமிக்கும் உலகின் முதலாவது தெர்மல் மின்கலன் தொழிற்சாலை ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

- தொழில்நுட்பங்களின் தாக்கத்தை அதிகரிக்கவும், அறிவியல் ஆராய்ச்சி மற்றும் அதன் தொழில்துறை பயன்பாடுகளுக்கு இடையேயான இடைவெளியை குறைப்பதற்காகவும் ஸ்டார்ட் அப் இந்தியா அமைப்பு 'Startup Academia Alliance Programme என்னும் நிறுவனத்தை துவக்கியுள்ளது.

- உச்ச நீதிமன்றத்தின் புதிய நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ள, இந்திரா பானர்ஜி, வினீத் நரண், கே.எம்.ஜோசப் ஆகியோர் ஆகஸ்டு 7 அன்று பதவியேற்றுக் கொண்டனர் உச்சநீதிமன்ற நீதிபதி தீபக் மிஸ்ரோ பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
    - உச்ச நீதிமன்றத்தில் தற்போது பணியில் இருக்கும் நீதிபதிகளின் எண்ணிக்கை 25 ஆக உயர்ந்துள்ளது.
    - அதில் தற்போது 3 பெண் நீதிபதிகள் உள்ளனர். ஆர்.பானுமதி, இந்து மல்கோத்ரா மற்றும் இந்திரா பானர்ஜி ஆகியோர் ஆவர்.

- கேரள சட்டப்பேரவையின் 60வது ஆண்டு விழாவினை (Diamond Jublee) குடியரசின் திருவிழாவாக (Festival on Democracy) திருவனந்தபுரத்தில் கொண்டாடப்படுகிறது.
    - இதனை குடியரசுத் தலைவர் இராம்நாத் கோவிந்த் தொடங்கி வைத்துள்ளார்.

- இந்தியாவின் முதல் மொபைல் பரிமாற்று மண்டலம் (Mobile Exchange Zone) உத்திரப் பிரதேச மாநிலம் ‘நொய்டாவில் அமையவுள்ளது.
    - இம்மண்டல அமைப்பிற்கான அடிக்கல் நடுவிழாவை இந்திய பிரதமர் தொடங்கி வைத்தார்.

- கர்நாடக மாநிலத்தில் கிராமப்புற தூய்மை மற்றும் சுகாதாரத்தைப் பேணுவதற்காக ஸ்வச்செம்வே ஜெயேட் (Swachhamea Jayate) என்னும் பிரச்சாரத்தை கர்நாடக மாநில அரசு துவக்கியுள்ளது.

**உலக நிகழ்வுகள்**

- இந்தியா – தாய்லாந்து கூட்டு இராணுப் பயிற்சி – மைத்ரீ-2018
    - தாய்லாந்து நாட்டின் மூவாங் சாச்சொங் சோவா மாகாணத்தில் இந்திய இராணுவம் மற்றும் ராயல் தாய் இராணுவம் இடையே இரண்டு வார கால கூட்டு இராணுவப் பயிற்சி ‘மைத்ரீ.2018’(MAITREE - 2018) ஆகஸ்ட் 6 முதல் தொடங்கியுள்ளது.

**முக்கிய தினங்கள்**

- ஆகஸ்ட் 7 - இரவீந்திரநாத் தாகூர் நினைவு தினம்
- **குறிப்பு**
    - 1913ம் ஆண்டில் இரவீந்திர நாத் தாகூரின் கீதாஞ்சலி படைப்புக்கு இலக்கியத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.
    - 1921-ல் தாகூர் விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தை நிறுவினார்.
    - இரவீந்திரநாத் தாகூரின் ‘ஜன கண மன’ என்னும் பாடல் இந்தியாவின் தேசிய கீதமாகவும், இன்னொரு பாடலான ‘அமர் - சோனத் பங்ளா’ வங்க தேசத்தின் தேசிய கீதமாக பாடப்பட்டு வருகிறது.
    - இரவீந்தரநாத் தாகூர் 1941ம் ஆண்டு ஆகஸ்ட் 7 அன்று மரணம் அடைந்தார்.

**புத்தகங்கள்**

We Shine Academy™

- Devil Advocate: The Untold Story – என்னும் சுயசரிதை நூலை பிரபல பத்திரிக்கையாளர் கரண் தாப்பர் என்பவர் எழுதியுள்ளார்.

We Shine Academy ™